1971 ஜூலை 27]

மாணவிக்கு ஒரு பகுதிக்கு ரூ. 80 என்ற அடிப்படையில் கட்டணம் வசூலித்திருந்தால், அரசு அதை மாணவிகளுக்குத் திருப்பித் தந்துவிடும்படியும் அவ்வாறு கொடுக்கப்பட்ட மாணவிகளின் பட்டியல் ஒன்றைக் கொடுக்கும் படியும் கேட்டிருந்தது. கல்லூரிக் கல்வி இயக்குனருக்கு மேற்படி பட்டியலைக் கொடுக்க இக் கல்லூரி மறுத்துவிட்டது. மேலும், கல்வி மான்யம் பெறுவதற்கான இதன் கோரிக்கையும் உரிய முறையில் இல்லை. மேற்படிக் காரணங்களுக்காக 1969-70, 1970-71 ஆண்டுகளுக்கான கல்வி மான்யம் வழங்கப்படவில்லை. 1969-70-க்கு பி.யு.சி. வகுப்புக்கான கட்டண ஈடாக வழங்கிய ரூ. 1.84 லட்சத்தை ஆட்சேபணைக் கணக்கில் வைத்துள்ளது.

*468 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை S.I.E.T. மகளிர் கல்லூரி மாணவிகளைச் சேர்க்கும் முறையில் அரசு ஏதாவது ஆட்சேபணை தெரிவித்துள்ளதா?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ): மாணவிகளைச் சேர்க்கும் முறைபற்றி எத்தகைய எதிர்ப்பும் எழுப்பப்படவில்லை. புகுமுக வகுப்புகளில் இலவசக் கல்வி அளிக்கும் முறை பற்றி அரசு வெளியிட்டுள்ள எல்லாத் தனியார் கல்லூரிகளுக்கும் பொருந்துகின்ற விதிகளையும் ஆணைகளையும் இக் கல்லூரி பின்பற்ற வேண்டும் என்று அரசு விரும்பியது.

*459 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை S.I.E.T. மகளிர் கல்லூரியில் மாணவிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட ட்யூஷன் பீஸ் விஷயமாக அரசு ஆட்சேபணை ஏதும் தெரிவித்துள்ளதா?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) எல்லா நிலைகளிலும் இலவசக் கல்வி அளித்தல் என்ற கொள்கையை ஒட்டி, அரசு, 1969-70-லிருந்து புகுமுக வகுப்புகளுக்கு இலவசக் கல்வி அளிக்கும் முறையை விரிவாக்கவும், கல்லூரிகளுக்குக் கட்டணம் வசூலிக்காமையால் ஏற்படும் இழப்பை ஈடு செய்யவும் ஆணைகள் வெளியிட்டது. S.I.E.T மகளிர் கல்லூரி அரசின் மேற்படி ஆணைகளைப் பின்பற்றுமல் 1969-70, 1970-71-ம் ஆண்டுகளில் புகுமுக வகுப்பு மாணவிகளிடமிருந்து முன் பணமாகக் கட்டணம் வசூலித்தது. அரசினிடமும் இதற்கு ஈடு கேட்டது. அரசினிடம் உதவித் தொகை பெறும் கல்லூரி என்ற முறையில் அரசின் சட்டங்களுக்கு இக் கல்லூரி உட்பட்டதே ஆகும். ஆகவே புகுமுக வகுப்புகளில் இலவசக் கல்வித் திட்டத்தை இக் கல்லூரியிலும் பின்பற்றியிருக்க வேண்டும். 1969-70, 1970-71-ம் ஆண்டுகளில் புகுமுக வகுப்புக் கல்விக் கட்டணம் வசூலித்திருக்கக் கூடாது. முன்பணமாக மாணவிகளிடமிருந்து கட்டணம் வசூலித்ததுமல்லாமல் 1969-70-ம் ஆண்டிற்குரிய புகுமுக வகுப்பிற்குரிய